1997 மார்ச் 15] [திரு. டி. மணி]

வேறு படையோ, இராமேஸ்வரம் செல்கின்ற மீனவர்களை பல்வேறு நேரங்களிலே இப்படி கடத்திக் கொண்டு போவது ஒரு நிரந்தர நிகழ்ச்சியாக நடைபெற்று வருகின்றது. இதிலே இன்னும் 30 பேர் மீட்கப்படவில்லை; இலங்கை சிறையிலே அடைக்கப்பட்டு இருக்கிறார்கள்; மாதங்கள் ஆகின்றது. எனவே, மாநில அரசு மத்திய அரசோடு இணக்கமாக இதற்கு முன்னர் பேசி இருந்தாலும்கூட, இவ்வளவு காலதாமதம் ஆகியும், இன்னும் 30 பேர் மீட்கப்படவில்லை என்று சொன்னால், அவர்களுடைய குடும்பங்களினுடைய நிலை இன்னும் பரிதாபத்திற்கு உரியதாக இருக்கும். எனவே, அந்தக் குடும்பங்களைப் பாதுகாக்கின்ற வகையில் உதவுவது ஒரு பக்கம்; இன்னொரு பக்கத்திலே இந்தக் கடல் எல்லை என்பது, அது எந்த அளவு வரையறுக்கப்பட்டு இருக்கின்றது? அதற்கு ஏதாவது நம்முடைய மாநில அரசு மத்திய அரசோடு பேசி ஒரு முடிவுக்கு வர முடியுமா? இந்த வகையிலே இந்த சிக்கலைப் போக்குவதற்கான உரிய நடவடிக்கை என்ற வகையிலே மாநில அரசு மத்திய அரசோடும் விரைவாக தொடர்பு கொண்டு, 30 மீனவர்களை மீட்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

* **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முக்கியமான பிரச்சினை குறித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய சார்பில் திரு. பழனிசாமி அவர்களும், அ.தி.மு.க. சார்பில் திரு. தாமரைக்கனி அவர்களும், மார்க்சிஸ்ட் கட்சி சார்பில் மணி அவர்களும் இங்கே சில கருத்துக்களை எடுத்து வைத்து இருக்கின்றார்கள். இவை தொடர்ந்து நடைபெற்று வருகின்ற, நம்முடைய உள்ளத்திற்கு துன்பம் தருகின்ற நிகழ்ச்சிகளாகவே இருந்து வருகின்றன என்பதில் இருவேறு கருத்துக்கு இடம் இல்லை. இதுபற்றி மத்திய அரசோடு, குறிப்பாக வெளியுறவுத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. குஜ்ரால் அவர்களோடு நான் 4,5 முறை பேசி இருக்கின்றேன். நான் பேசி வலியுறுத்தியதன் காரணமாக, அவர்கள் இலங்கை அரசோடு தொடர்பு கொண்டார்கள். அதற்குப் பிறகு இலங்கைக்கே சென்று அங்கு உள்ள அதிகாரிகளை, செயலாளர், தலைமைச் செயலாளர் மற்றவர்களை எல்லாம் இங்கே அனுப்பி வைத்து, அரசு அதிகாரிகளோடும் என்னோடும் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்கின்ற வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுத்தார்கள். அப்போது இந்த எல்லை குறித்த வரைபடங்களை எல்லாம் எடுத்து வைத்துக் கொண்டு விவாதம்

நடத்தி, இதற்கு ஒரு சுமுகமான முடிவு காண வேண்டும் என்று கூறப்பட்டது. அதைத் தொடர்ந்து முதல் கட்டமாக, சிறைப்பிடிக்கப்பட்டு இருக்கின்ற மீனவர்களை விடுவிக்கின்றோம்; ஒவ்வொரு கட்டமாகத்தான் விடுவிக்க முடியும்; ஏனென்றால் அவர்கள் மீது பல வழக்குகள் விசாரணையிலே இருக்கின்றன; ஒவ்வொரு கட்டமாக தான் விடுவிக்க முடியும் என்று சொன்னார்கள்; அதன்படி முதல்கட்டமாக இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 15 பேர்—பிச்சை, ஆம்ஸ்ட்ராங், பதிநாதன், சகாய அந்தோணி, அந்தோணிசாமி தர்மராஜ், அடைக்கலம், சேஷப்பூபால நாயர் டெரிகோஸ், ஆறுமுகம் நாகராஜ், தஸ்னிவாஸ், முனியாண்டி ரவி, பாண்டி பெரியையா, கே. முத்துராமலிங்கம், பாண்டி சீனி, சுப்பையா சுரேஷ், கே.பி. பாலசுப்பிரமணியம் என்ற 15 பேரும் விடுவிக்கப்பட்டார்கள்; கச்சத் தீவுக்கு அருகிலே உள்ள நடுக் கடலில் இலங்கை அரசால் அவர்கள் விடுவிக்கப்பட்டு, தமிழ்நாடு அரசின் சார்பில் அவர்கள் கரைக்கு அழைத்து வரப்பட்டார்கள்.

முற்பகல் 10-40

இரண்டாம் கட்டமாக, 5-3-1997 அன்று முத்து, செந்தூரன் ஆகிய இரண்டு பேர் விடுவிக்கப்பட்டார்கள். மூன்றாம் கட்டமாக, 11-3-1997 அன்று சின்னையன், ரவி வீரபத்திரன், அருள், சந்தான ராஜா என நான்கு பேர் விடுவிக்கப்பட்டார்கள். விடுவிக்கப்பட்ட அனைத்து மீனவர்களையும், இராமேஸ்வரம் மண்டல மீன்துறை இயக்குநரும், இந்தியக் கடலோரக் காவல் படை அலுவலர்களும் பாதுகாப்பாக மண்டபம் கரைக்கு அழைத்து வந்தார்கள். எஞ்சியுள்ள 24 மீனவர்களையும் அங்கே பிடித்து வைக்கப்பட்டுள்ள எட்டுப் படகுகளையும் இந்தியாவிற்குத் திருப்பிக் கொண்டு வர வேண்டும் என்பதற்காக, இந்திய தூதரகம் மூலம் இடைவிடாமல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அவர்களைக் கேட்டால், அவர்கள் நிர்ணயிக்கப்பட்ட எல்லையைத் தாண்டி வருவதாகச் சொல்கின்றார்கள். சில நேரங்களில் மீன் பிடிக்கின்ற தொழிலுக்காக மாத்திரம் வரவில்லை, வேறு சில காரியங்களும் நடைபெறுகின்றன என்று சொல்கின்றார்கள். அதில் எது உண்மை என்று நம்மால் யூகிக்க முடியவில்லை. இருந்தாலும், அப்படி செல்கின்றவர்களைப் பற்றி உடனடியாக இந்திய அரசுக்கு அறிவித்து, அவர்கள் மீதுள்ள குற்றம் என்ன என்பதையெல்லாம் விளக்கிச் சொன்னால் நமக்கும் காரணங்கள் தெரிவதற்கு ஏதுவாகும்.

அப்படியும் செய்யாமல் இதுபோன்ற தொல்லைதரும் நிகழ்ச்சியை, துயரம் தரக் கூடிய நிகழ்ச்சியை அடிக்கடி இலங்கையிலே உள்ள சிங்களப் படையினர் செய்து வருவது வருந்தத்தக்கது, வேதனைக்குரியது. இதைப் பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கின்றோம். இந்த அவையிலும் நாம் பலமுறை பேசியிருக்கின்றோம். இருந்தாலும் இது தொடர்ந்து நடக்காது என்பதற்கு அறிகுறியாகத்தான், முதல் கட்டம், இரண்டாவது கட்டம், மூன்றாவது கட்டம் என்று பலர் அங்கே கடத்தப்பட்ட அல்லது சிறைவைக்கப்பட்ட பலர் இதுவரையிலும் விடுவிக்கப்பட்டு வருகிறார்கள். மற்ற 24 பேரையும் விடுவிக்கவேண்டுமென்று நாம் இந்தியத் தூதரகத்தோடு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம்.

கச்சத்தீவை மீட்பதற்காக தீர்மானம் இங்கே நிறைவேற்றப்பட வேண்டும் என்று திரு. தாமரைக்கனி சொன்னார். 1991 ஆம் ஆண்டு ஒரு குரல் கேட்டது, கோட்டை முகப்பிலேயிருந்து. கச்சத்தீவை மீட்டே தீருவேன் என்று ஒரு குரல் கேட்டது. அதற்குப் பிறகு ஆறு வருடங்கள் ஆகிவிட்டன, கச்சத்தீவு மீட்கப்படவில்லை. கச்சத்தீவை மீட்பது என்பது, ஒரு மாநில அரசினுடைய காரியம் அல்ல.

ஏற்கெனவே 1974 ஆம் ஆண்டு வாக்கில், கச்சத்தீவை இலங்கைக்குத் தருவது என்ற முடிவை மத்திய அரசு எடுத்தபோது, அன்றைக்கு இருந்த மாநில அரசான திராவிட முன்னேற்றக் கழக அரசு அதற்குப் பெரும் எதிர்ப்பைத் தெரிவித்தது. தமிழ்நாட்டிலே உள்ள எல்லா கட்சிகளுமே எதிர்ப்பைத் தெரிவித்தன என்பது வரலாற்று உண்மையாகும். இருந்தபோதிலும் சில காரணங்களைச் சொல்லி கச்சத் தீவு இலங்கைக்கு வழங்கப்பட்டுவிட்டது. அப்படி வழங்கப்பட்ட நேரத்திலே கூட, கச்சத்தீவிலே மீன்பிடிக்கும் உரிமை, யாத்திரை செல்கின்ற உரிமை இவை எல்லாம் அதிலே இருக்கவேண்டுமென்று தமிழக அரசு கடைசியாக இதையாவது ஏற்றுக் கொள்ளுங்கள் என்று கண்டிப்பாக வலியுறுத்தித் தெரிவித்தபிறகு, அந்த ஷரத்துக்கள் அதிலே சேர்க்கப்பட்டன. பின், கழக ஆட்சி 1976-ல் கலைக்கப்பட்டபிறகு இடையில் வந்த கவர்னர் ஆட்சியில் ஏதோ ஒரு கடிதப் பரிவர்த்தனை மூலமாக அந்த ஷரத்து அதிலிருந்து எடுக்கப்பட்டுவிட்டது என்று சொல்லப்பட்டு, அந்த உரிமை பறிபோய் விட்டது என்பதை நாட்டுமக்கள் நன்றாக அறிவார்கள்.

இப்போது கச்சத்தீவைத் திரும்பப் பெறாவிட்டாலும்கூட, அந்த உரிமைகளை ஷரத்தாக அந்த ஒப்பந்தத்திலே சேர்ப்பதற்கான முயற்சிகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டுமென்று மாநில

அரசின் சார்பாக நான் பலமுறை நேரிலே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். கடிதம் மூலமும் இந்த நிலைகள் தொடரக் கூடாது என்பதை வலியுறுத்தி, மத்திய அரசுக்குச் சொல்லி வருகின்றோம்.

இன்று எழுப்பப்பட்ட இந்தப் பிரச்சினையின் மூலமாக மீண்டும் மத்திய அரசை இந்தத் தமிழ்நாட்டு மக்களின் சார்பாக இதுகுறித்து வலியுறுத்துகிறோம் என்பதையும், எடுத்துக் கூறி, இது சிங்கள அரசின் கவனத்திற்கும் கொண்டுவரப்படுகிறது என்பதையும் எடுத்துக்கூறி இனியும் இது தொடராமல் பார்த்துக் கொள்ளவேண்டும், நம்முடைய மீனவர்களும் மீன் பிடிப்பதற்காக மாத்திரமே செல்ல வேண்டும் என்றும் எடுத்துக்கூறி இந்த அளவில் என்னுடைய விளக்கத்தை நிறுத்துகின்றேன்.

4. கவன ஈர்ப்பு

1402-ஆம் பசலியிலிருந்து தல மேல்வரி (Local cess) உயர்த்தப்பட்டதற்கு இணையான மானியம், ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்படாமை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி *55*-ன் கீழ், அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. ஜி.பி. வெங்கிடு, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. ஜி.பி. வெங்கிடு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "*1402*-ஆம் பசலியிலிருந்து தல மேல் வரி (Local Cess) உயர்த்தப்பட்டதற்கு இணையான மானியம், ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்படாதது குறித்து" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

"தமிழ்நாடு அரசிதழ் எண். *355*, நாள் *15-6-1992*-ல் வெளியான தமிழ்நாடு ஊராட்சிகள் திருத்த சட்டம் *1992*-ன்படி *1402*-ம் பசலியில்